# இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

# வெற்றிடம்

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அரச வைத்தியசாலைகளுக்காக மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை இறக்குமதி செய்யும் ஒரே அரச நிறுவனம் என்பதோடு, தனியார் துறைக்காக மருந்துகளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் முதன்மை நிறுவனமாகும்.

## பிரதிப் பொது முகாமையாளர் (விற்பனை மற்றும் ஊக்குவிப்பு) (HM 1.1)

**தகைமைகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து சந்தைப்படுத்தல்/ வர்த்தகம்/ வர்த்தக நிர்வாகம் தொடர்பில் பட்டம்/ விசேட பட்டம் அல்லது அந்தத் துறை தொடர்பில் ஒத்த தகைமை

   மற்றும்

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சந்தைப்படுத்தல்/ வர்த்தகம்/ வர்த்தக நிர்வாக துறைக்குத் தொடர்புடைய பட்டப் பின்படிப்பு (Masters) பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்

   மற்றும்

   அரச/ கூட்டுத்தாபன/ சபை/ சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்தில் பதவி ஒன்றில் சந்தைப்படுத்தல் துறை தொடர்பில் குறைந்தது 12 ஆண்டுகள் அனுபவம்

   அல்லது

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து சந்தைப்படுத்தல்/ வர்த்தகம்/ வர்த்தக நிர்வாகம் தொடர்பில் பட்டம் அல்லது BSc விசேட பட்டம் அல்லது அந்தத் துறைக்கு தொடர்புடைய ஒத்த தகைமை

   மற்றும்

முதல் பட்டத்தின் பின் அரச/ கூட்டுத்தாபன/ சபை/ சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்தின் பதவி ஒன்றில் சந்தைப்படுத்தல் துறை தொடர்பில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்

**சம்பள அளவு:** ரூபா 100,370/- 15 x 2,840/- Rs. 142,970/-
(தோராயமாக மாத ஊதியம் ரூபா 213,466/- அளவு அமையும்)

**வயது வரம்பு:** 55 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள்,**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்

ii. பதவியின் கடமைகளை முறையாகச் செய்வதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மாதாந்த வருகை ஊக்கக் கொடுப்பனவு, பெறப்படாத விடுப்புகளை பணமாக்கல், வருடாந்த மிகையூதியம், அங்கத்துவ நன்மைகள், மருத்துவ நன்மைகள் மற்றும் ஊழியருக்கு மற்றும் குடும்பத்தினருக்கு மருத்துவமனையில் நிறுத்தப்படும்போதும் மருத்துவ காப்புறுதி மற்றும் அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவான வகையில் கூட்டுத்தாபனத்தினால் பேணப்படும் வாகனம் ஒன்று மற்றும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு உட்பட கவர்ச்சிகரமான நன்மைகள் பல உரித்தாகும்.

விண்ணப்பதாரர்களினால் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பப் படிவத்தில் வயது, தகைமை, பயிற்சி, சேவை அனுபவம், தற்போதைய பதவி, சம்பளம் மற்றும் சம்பள அளவு, வகித்த முந்தைய பதவிகள் மற்றும் முந்தைய தொழில் வழங்குநர்களுக்கு இணைந்த மற்றும் விலகிய திகதிகள் ஆகிய விடயங்களை உள்ளடக்கி தேசிய அடையாள அட்டையின் பிரதி, உறுதி செய்யப்பட்ட பிரதிகள் மற்றும் உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரியுடன் அனுப்புதல் வேண்டும். குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தயவுடன் கருத்தில்கொள்ளவும்.

விண்ணப்பத்தை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். அரச/ அரச கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபையில் சேவையில் ஈடுபடும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை. குறித்த நிறுவன தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். அனைத்த விண்ணப்பங்களும் 2026.04.06 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**பொது முகாமையாளர் - பதில்**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**
**“மெஹெவர பியச”,**
**16ஆவது மாடி, இல. 41,**
**கிருள வீதி. நாராஹென்பிட்ட, கொழும்பு 05.**
**தொலைபேசி இலக்கம் 0112 320 356 - 9**